(ஆஈ) மேலூர் கூட்டுறவு நூற்பாலையை இயங்கச் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியிலே மூடிக்கிடக்கிற கூட்டுறவு நூற்பாலையைத் திறக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். இலங்கையிலே இருந்து வந்த இலங்கைத் தமிழர்கள் 1,000 பேர் அதிலே பணிபுரிந்து வந்தார்கள். 1989 ஆம் ஆண்டு அந்த ஆலை மூடப்பட்டது. என்னுடைய வீட்டிற்குப் பக்கத்திலே 100 மீட்டர் தூரத்திலே அந்த ஆலை இருக்கிறது. அது மூடிக் கிடக்கிறது. அந்தக் கூட்டுறவு நூற்பாலையைத் திறப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

(ஆஉ) பட்டுக்கோட்டை தொகுதி, சொக்கனாவூர்-புளியக்குடி அருகே உயர்மட்டப் பாலம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியத்தைச் சார்ந்த சொக்கனாவூர், புளியக்குடி ஆகிய ஊர்களுக்குச் செல்லக்கூடிய வழியிலே இருக்கக்கூடிய தரைப்பாலத்தை உயர்மட்டப் பாலமாக கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக எங்களிடையே இருக்கின்றது. (குறுக்கீடு) பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியத்தைச் சார்ந்த சொக்கனாவூர்- புளியக்குடி கிராமங்களுக்குச் செல்லக்கூடிய, 1960 ஆம் ஆண்டு கட்டப்பட்ட அந்தப் பாலம் தரைப் பாலமாகவே இருந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அன்றைய அமைச்சர் மரியாதைக்குரிய மாண்புமிகு ராமையா போன்றவர்கள் எல்லாம் அந்தப் பகுதிக்கு வந்தபோதுகூட நீச்சல் அடித்துதான் அந்தப் பகுதிக்குச் சென்ற சூழ்நிலை உருவானதாகச் சொல்வார்கள். நமது மரியாதைக்குரிய மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கடந்த வெள்ளத்தின்போது மதுக்கூருக்கு வந்தபோது நபார்டு திட்டத்தின்கீழ் அந்தப் பாலத்தை கட்டிக் கொடுப்பதாக உறுதி அளித்திருந்தார்கள். இந்த நிதியாண்டிலே மீண்டும் அந்தப் பாலத்தை*